1982 மார்ச் 5]

1981 ஜூனில் கோவையில் நடைபெற்ற தமிழ்நாடு நீர்ப்பாசன ஆலோசனைக் குழுக்கூட்டம்.

*வினா எண் 376.—**திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்பு**மிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1981 ஜூனில் கோவையில் தமிழக நீர்ப்பாசன ஆலோசனைக்குழு கூட்டம் நடைபெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் முடிவுகள் என்ன ?

(இ) உறுப்பினர்கள் யார், யார் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) (ஆ) & (இ) . விவர அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துளைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையிலே, 5-ஆம், 6-ஆம் தீர்மானத்திலே தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள், நிதி வசதி இவற்றைக் கருத்திலே கொண்டு பின்தங்கிய பகுதிகளில் சில கோடி ரூபாய் மதிப்புள்ள பாசனத் திட்டங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், 7-ஆவது தீர்மானத்திலே மேற்கு நோக்கி பாயும் ஆறுகளில் உள்ள உபரி நீரை, நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு திருப்பிவிட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அந்த வேலை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வதோடு, இந்த ஜூன் மாதம் நடைபெற்ற அந்தக் கூட்டத்திற்குப் பிறகு அடுத்த கூட்டம் இதுவரையிலே நடைபெறவில்லை என்பது உண்மையா ? அப்படியானால் அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு ஆலோசனைக் குழுக் கூட்டம் நடந்து அங்கே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் பற்றி அரசு நடவடிக்கை எடுப்பதற்குக் கொஞ்சம் காலம் தேவைப்படுகிறது. ஆலோசனைக் கூட்டத்தையே தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பதைவிட ஒரு 6 மாத இடைவெளி கொடுத்து நடத்தினால் முந்தைய கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று கருதி இடையிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. வேறு காரணம் அல்ல.

@ 364—365 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள் நிதி வசதி இவற்றைக் கருத்தில் கொண்டு பின்தங்கிய பகுதிகளில் சில கோடி ரூபாய் மதிப்புள்ள பாசனத் திட்டங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் இதிலே தெளிவாக விவாதித்தபோது Benefit cost rates மனதில் கொண்டு சில திட்டங்களை நாம் நிறுத்திவிடக் கூடாது. பின்தங்கிய பகுதி என்று வருகிறபோது கூடுமானவரை அந்தத் திட்டங்களை எடுத்துச் செயல்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டது. அது குறித்து ஏற்கெனவே சில கேள்விகளுக்கு பதில் சொல்லும்போது பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்ற பட்சத்தில் பொருளாதார ரீதியாக லாப நட்டக் கணக்குப் பார்க்காமல் அந்த திட்டத்தை எடுக்க வேண்டும் என்று அரசு ஏற்கெனவே ஒரு கருத்தை வழங்கி இருக்கிறது. அந்தக் கருத்தின் அடிப்படையில் நாம் இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, இதிலே ஏழாவது தீர்மானமாக, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் உள்ள உபரி நீரை தமிழ் நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு திருப்பிவிட வேண்டும் என்ற முறையிலே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே அந்த நதிகள் பொறுப்பிலே இருக்கின்ற கேரள அரசோடு, அவர்களுடைய மக்களுடைய நலனுக்குப் பாதகம் இல்லாமல், நமக்குக் கிடைக்கும் முறையிலே, சீக்கிரமாக தொடர்ந்து பேசி அதன் காரணமாக ஏதாவது பலன் நமக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறதா? அந்த வாய்ப்பின் அடிப்படையிலே எந்த எந்த மாவட்டங்களுக்கு அவைகள் உபயோகிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் நதியைத் தமிழகத்திற்கு திருப்பி விடுவது குறித்து தமிழக அரசு எவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இதற்கு முந்தைய கேரள அரசு, இடதுசாரி கூட்டணி ஆட்சியாக இருந்தபோது கூட, பல்வேறு கட்டங்களிலே நாம் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே காட்டுகின்ற அதே அக்கறையை அங்கே இருக்கின்ற அவர்களுடைய இயக்கத்தோடு அந்த நேரத்தில் காட்டி (குறுக்கீடு) மன்னிக்க வேண்டுகிறேன். எல்லாம் அந்தந்த மாநிலம் என்று வருகிறபோது, சர்வதேசியம், தேசியங்கள் எல்லாம் அடிபட்டுப் போகின்றன. அங்கங்கே அவரவர்கள் அதிகாரத்தில் இருப்பதற்கு என்ன வழி என்று பார்க்கிறார்களே

1982 மார்ச் 5]

தவிர, மக்களுடைய நன்மை என்ன என்று நாம் பொதுவாக சில நேரங்களிலே கவனிக்கத் தவறி விடுகிறோம். இவைகளை எல்லாம் பிரச்சினையாகக் கொண்டுவர நான் விரும்பவில்லை. ஏனென்றால் இது பெரிய சர்ச்சைக்குரிய விஷயம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாம் இப்போது உள்ள அரசோடு தொடர்பு கொண்டு இருக்கிறோம். தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசே கூறியதைப்போல பேச்சுவார்த்தை மூலமாக நீர் கிடைத்துவிடும் என்று நாம் இன்னும் நம்பிக் கொண்டு இருக்க வேண்டுமா என்பது கூட இப்போது நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த பேச்சுவார்த்தைகளை நடத்த ஏற்பட்ட செலவுகளை கூட்டிக் கழித்துப் பார்த்தால் இதிலேயே 2, 3 அணைகளை கட்டி இருக்கலாம் போல் தெரிகிறது. எனவே நாம் கூடுமானவரை மத்திய அரசிடம் சொல்லி, எங்கெங்கு உபரி நீர் இருக்கிறதோ அதை எல்லாம் பற்றாக்குறை மாநிலங்களுக்குத் திருப்புவதற்கு அவர்கள் ஒரு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். தேசிய சொத்தை வீணாக்குவதற்கு எந்த மாநிலத்திற்கும் அதிகாரம் கிடையாது. நதி நீர் என்பது பொதுச் சொத்து. அதை வீணாக்குவதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது என்று சொல்லி மத்திய அரசை நாம் கேட்டிருக்கிறோம்.

1975-76 ஆம் ஆண்டில் நீர்த் தேக்கங்களிலுள்ள வண்டல் படிவுகளை ஆய்வு செய்யும் திட்டம்.

* **வினா எண் 377.—திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்** துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1975-76 ஆம் ஆண்டில் நீர்த் தேக்கங்களில் உள்ள வண்டல் படிவுகளை ஆய்வு செய்ய திட்ட பணி மேற்கொள்ளப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்.

(ஆ) கிருஷ்ணகிரி, சாத்தனூர் ஆகிய நீர்த் தேக்கங்களில் உள்ள வண்டல் படிவுகளை ஆய்வு செய்வதற்கு திட்டப் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது.